பி அண்டு சி மில்ஸ் சம்பந்தமாக 8---3---1974-ல் ஒரு உடன்பாடு கையெழுத்தாகி 11---3---1974 முதல் வேலைநிறுத்தம் கைவிடப் பட்டது.

திரு. என். கே. பழனிசாமி: சார், அருணகிரி கமிட்டியின் முன்னுரையில் தொழிலாளர்களுக்கு, விலைவாசி ஏற்றத்தின் காரணமாக 400 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக் கிறது. இன்றைக்கு 5 ரூபாய் மட்டும் கொடுத்திருப்பதால் மறுபடியும் ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடந்து, முடிவில் பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருக்கும்பொழுதே 'அட்ஜூடி கேஷனுக்கு' அனுப்புவதற்கு காரணம் என்ன? மாண்புமிகு முதலமைச்சரவர்களோ அல்லது லேபர் மினிஸ்டர் அவர்களோ நேரடியாக தொழிலாளர்களைக் கூப்பிட்டு பேச்சுவார்த்தை நடத்து வதற்கு என்ன தடங்கல் இருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அந்த அறிக்கை வந்தது, ஸ்டிரைக் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது, அதறகுப்பிறகு பேச்சுவார்த்தை நடந்தது என்று உறுப்பினரே சொன்னார்கள். அதற்குத்தான் நாங்களும் கவலைப்படுகிறோம். அறிக்கை வந்தது, பேச்சுவார்த்தை நடந்தது, அது முறிந்து விட்டது என்ற பிறகு ஸ்டிரைக் நோட்டீஸ் கொடுத்தால், அது பொருத்தமாக இருந்திருக்கும். முன்கூட்டியே பேச்சுவார்த்தை நடக்காததுதான் இதற்குக் காரணம்.

கோயில்பட்டி பூவணநாதசாமி கோயில்

*609 வினா—**திரு. எம். முத்தையா:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டியிலுள்ள பூவணநாதசாமி தேவஸ்தானத்தில் தற்போது எத்தனை அறங் காவலர்கள் உள்ளனர்?

(இ) அவர்களில் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்?

1974 மார்ச் 26]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) இக்கோயிலுக்கு ஓர் அரிசன அறங்காவலர் உட்பட ஐவர் அறங்காவலர்களாக இருந்தனர். இவர்களில் நால்வரின் பதவிக் காலம் முடிவுற்றதால், தற்போது ஒருவர் மட்டும் அரிசன வகுப்பைச் சேராதவர் அறங்காவலராக இருக்கிறார். காலியாக உள்ள பதவிகளை நிரப்புவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அப்போது அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவரை அறங்காவலராக நியமிப்பது பற்றியும் கவனிக்கப்படும்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர்வர்களே, அறங்காவலர்களின் பதவிக்காலம் முன்பு ஐந்தாண்டுக்காலமாக இருந்தது. இப்பொழுது அதை மூன்றாண்டுகள் என்று குறைத்ததற்குக் காரணம் என்ன? மீண்டும் ஐந்தாண்டுகள் என்று ஆக்குவதற்கு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மூன்றாண்டுக்காலத்திலே சிறந்த முறையிலே பணியாற்றலாம் என்ற நோக்கத்தில்தான் அப்படிச் செய்யப்பட்டிருக்கிறது. அது மூன்றாண்டுகள் என்று தொடர்ந்து இருப்பதற்குத்தான் அரசு விரும்புகிறது.

Coolers for sale of milk

*610 THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that the Tamil Nadu Dairy Development Corporation has drawn up a scheme in recent times to provide Milk Coolers on hire purchase to private persons for the sale of its milk and milk products in Madras; and

(b) if so, the details of the scheme?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) செய்தித்தாள்களில் சிறிய அளவில் விளம்பரம் செய்யப்பட்டது. ஒரு சிலரே இதற்குப் பதில் அனுப்பினர். மேற்கொண்டு ஆய்வு செய்த பிறகு இத்திட்டம் கைவிடப்பட்டது. வசதியுள்ள இடங்களில் பொதுமக்களுக்கு பால், பால்பொருட்களை விற்பனை செய்வதற்கு தமிழ்நாடு பால்வள நிறுவனத்துறை மூலமாக குளிர் சாதனக் கருவிகளை ஏற்படுத்தியுள்ளது.